O.S.39/2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39/2018

வாதி தரப்பு 1வது சாட்சி வள்ளிக்கண்ணு என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. வள்ளிக்கண்ணு | வயது | : | 58/23 |
| கணவர் பெயர் | : | சந்திரசேகர் | தாலுகா | : | ஆலங்குடி |
| கிராமம் | : | சேந்தான்குடி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-07.12.2023

வா.சா1

**<u>2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) கோவிந்தம்மாள் மற்றும் மீனாட்சி ஆகியோருடன் 20,30 வருடங்களாக பேச்சு, வார்த்தை கிடையாது. அதனால் நான் அவர்களது வீட்டிற்கு செல்வது இல்லை.

2) 1ம் பிரதிவாதி முனியாண்டியுடன் எப்பொழுதாவது பேசுவேன். எனது அம்மா இறந்த பின்பு அவரின் வீட்டிற்கு போக, வர இருப்பேன்.

3) முன்னியாண்டி இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அவர்தான் என்னை அழைத்து வந்தார்.

4) வழக்கு சொத்து எனது அம்மா காத்தாயியின் இரண்டாவது கணவர் ரெங்கனுடைய பரம்பரை சொத்து என்றால் சரிதான்.

5) 2ம் பிரதிவாதிக்கும் அரங்குளலிங்கத்திற்கும் பிரச்சினை ஏற்பட்டு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு போட்டவுடன் தான் இந்த சொத்தை எனது தாயார் இனாம் செட்டில்மெண்டு எழுதி கொடுத்தார் என்றால் இருக்கலாம்.

6) 2ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

7) அரங்குளலிங்கம் டாடா ஏஸ் வாகனம் வைத்திருந்ததை 2ம் பிரதிவாதி வாங்கி கொண்டார் என்றால் சரிதான்.

8) அரங்குளலிங்கம் வைத்திருந்த டிவிஎஸ் எக்ஸ் எல் வாகனத்தை 1ம் பிரதிவாதியும், அவரது மகனும் வைத்திருப்பதாக கேள்விப்பட்டேன். அது எனக்கு நேரடியாக தெரியாது.

9) மேற்படி டிவிஎஸ் எக்ஸ் எல் வாகனத்தை 1ம் பிரதிவாதியின் மகன் திருடி சென்றுவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10) வழக்கு சொத்தில் நான் பாகம் கோருவதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

11) எனக்கும், பிரதிவாதிகளுக்கும் சொத்து பிரித்து கொடுக்கப்பட்டுவிட்டது என்றாலும், தற்போது முனியாண்டியின் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை போட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) நான் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் கோரியிருக்கும் 'பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.